இந்நோயாளிக்கு நீரிழிவினால் பாதத்தில் கடுமையான புண்கள் உருவாகியிருந்தன. உடலின் பிற பகுதிகளுக்கும் சட்டுமையான தொற்றுப் பரவும் இடரையும் மற்றும் பிற சிக்கல்களுக்கான வாய்ப்பையும் தவிர்ப்பதற்கு முழங்காலுக்கு கீழே காலை வெட்டி அகற்றவுக் போன்ற கடுமையான நடவடிக்கைகள் அவசியமாக இருந்தன. டாக்டர். சிவக்குமார் மற்றும் அவரது குழுவினரும், இருமுனைகள் கொண்ட ஒரு சிகிச்சை உத்தியை இவருக்குப் பயன்படுத்தினர். அறுவை சிகிச்சை மூலம் புண்விளிம்புகள் சேதமடைந்த திசுக்களை அகற்றல் மற்றும் அழுத்தத்தளர்வு இறந்த திசுக்களை துல்லியமாக அகற்றுவதும் மற்றும் பாதிப்படைந்திருந்த இடம் குணமடைவதற்காக தயார் செய்ய புண்ணைச் சுற்றியுள்ள அழுத்தத்தை தளர்வாக்கி நீக்குவதும் இச்செயல்முறையில் இடம்பெற்றன.

## தோல் ஒட்டுதல்

இதைத் தொடர்ந்து 3 வாரங்களுக்கு டாப்பிக்கல் ஆக்சிஜன் தெரபி (TOT) என்ற மிக நவீன சிகிச்சை இந்த நோயாளிக்கு வழங்கப்பட்டது. செறிவாக்கப்பட்ட ஆக்சிஜனை நேரடியாக புண் மீது செலுத்துகின்ற ஒரு நவீன சிகிச்சைமுறை இது. ஆக்சிஜன் கிடைப்பு நிலையை அதிகரிப்பது, பாக்டீரியாவின் வளர்சியை குறைப்பது மற்றும் புதிய ரத்த நாளங்கள் உருவாவதை தூண்டுவது ஆகியவற்றின் மூலம் குணமடைவதற்கு செயல்முறையை இந்த வழிமுறை மேம்படுத்துகிறது. நீரிழிவு பாத புண்கள், அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய தொற்றுகள் போன்றவற்றில் ரத்தஓட்டம் குறைவாக இருக்கிற காயங்கள் / புண்களுக்கு TOT சிகிச்சைமுறை குறிப்பாக அதிக பயனளிப்பதாக இருக்கும். புண்களுக்கு சிகிச்சையளிக்கும் வழக்கமான நடைமுறைகளோடு சேர்த்து TOT சிகிச்சை முறையும் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது.

இதுவரை சென்னை, அப்போலோ மருத்துவமனை 10 நோயாளிகளுக்கு வெற்றிகரமாக சிகிச்சையளித்து குணப்படுத்தியிருக்கிறது.

TOT சிகிச்சையை தொடங்குவதற்கு முன்பு காயத்தில் தொற்று இல்லாத நிலையை உறுதிசெய்வது மிக முக்கியம். TOT உட்பட, காயத்தை குணமாக்கும் எந்தவொரு சிகிச்சை முறையிலும் பாதிப்பு நிரம்பவும் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. கட்டுப்பாடற்ற நீரிழிவு, போதுமான இரத்த ஓட்டமின்மை அல்லது குறித்துவரைக்கப்பட்ட காய பராமரிப்பு செயல்முறைகளை முறையாக பின்பற்றாமல் போன்ற காரணிகளினால் காயம் மீண்டும் உருவெடுக்கக் கூடும். ஆனால், TOT சிகிச்சை முறையில் சென்னை, அப்போலோ மருத்துவமனையின் அனுபவம் இதுநாள் வரை மிக நன்றாக, நேர்மறையானதாகவே இருக்கிறது. இச்சிகிச்சை அவிக்கப்பட்டவர்களுக்கு காயங்கள் திரும்பவும் உருவாகவில்லை.

இச்சிகிச்சைக்குப் பிறகு, பாதத்திலிருந்து புண்ணின் நிலையை பிளவு – தோல் ஒட்டுதல் செயல்முறையை மேற்கொள்ளும் அளவிற்கு முன்மேற்றம் அடைந்திருந்தது. அதைத் தொடர்ந்து, பாதத்திலிருந்த காயம் முழுமையாக மூடப்படும் நிலை எட்டப்பட்டது. இந்த தொடர் சிகிச்சைகள் காலை வெட்டி அகற்றுவதிலிருந்து காப்பாற்றியதோடு, அவரது வாழ்க்கைத் தரத்தையும் கணிசமான அளவு உயர்த்தியிருக்கிறது. பிறரின் உதவியில்லாமல், நடமாட இவரை வைத்திருக்கிறது.

டாப்பிக்கல் ஆக்சிஜன் தெரபி (TOT) என்பது, உடலில் காயப்புண்கள் உள்ள பகுதியில் நேரடியாக செறிவூட்டப்பட்ட ஆக்சிஜனை வழங்குவதன் மூலம் புண்ணை குணமாக்குகின்ற ஒரு நவீன உத்தியாகும். குணமாக்கும் செல்களின் வளர்ச்சியை மற்றும் புதிய ரத்த நாளங்கள் உருவாவதை தூண்டுதல் என்பவற்றின் வழியாக, குணமாக்கும் செயல்முறையை இந்த வழிமுறை மேம்படுத்துகிறது. நீரிழிவு பாத புண்கள், அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய தொற்றுகள் போன்றவற்றில் ரத்தஓட்டம் குறைவாக இருக்கிற காயங்கள் / புண்களுக்கு TOT சிகிச்சைமுறை குறிப்பாக அதிக பயனளிப்பதாக இருக்கும்.

இதுவரை சென்னை, அப்போலோ மருத்துவமனை 10 நோயாளிகளுக்கு வெற்றிகரமாக சிகிச்சையளித்து குணப்படுத்தியிருக்கிறது.

TOT சிகிச்சையை தொடங்குவதற்கு முன்பு காயத்தில் தொற்று இல்லாத நிலையை உறுதிசெய்வது மிக முக்கியம். TOT உட்பட, காயத்தை குணமாக்கும் எந்தவொரு சிகிச்சை முறையிலும் பாதிப்பு நிரம்பவும் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. கட்டுப்பாடற்ற நீரிழிவு, போதுமான இரத்த ஓட்டமின்மை அல்லது குறித்துவரைக்கப்பட்ட காய பராமரிப்பு செயல்முறைகளை முறையாக பின்பற்றாமல் போன்ற காரணிகளினால் காயம் மீண்டும் உருவெடுக்கக் கூடும். ஆனால், TOT சிகிச்சை முறையில் சென்னை, அப்போலோ மருத்துவமனையின் அனுபவம் இதுநாள் வரை மிக நன்றாக, நேர்மறையானதாகவே இருக்கிறது. இச்சிகிச்சை அவிக்கப்பட்டவர்களுக்கு காயங்கள் திரும்பவும் உருவாகவில்லை.


நூலன் கூகர்ஸ் லிமிடெட்
CIN: L17111TN1987PLC014434
மின்னஞ்சல்: secretarial@nooranfashions.com; தொலைபேசி எண்: 044-26232374
www.nooranfashions.in
டிசம்பர் 31, 2023 கடன் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான முன்னணி நிதிநிலை அறிக்கை
விதி 52(4)யின்கீழ் வரையிடப்பட்ட SEPI (LODR) ஒழுங்குமுறைகள் 2015

| வ.எ. | விவரங்கள் | காலாண்டு முடிவு | | | ஒன்பது மாதங்கள் முடிவு | | ஆண்டு முடிவு |
|---|---|---|---|---|---|---|---|
| | | டிசம்பர் 31, 2023 தணிக்கை செய்யப்படாதது | செப்டம்பர் 30, 2023 தணிக்கை செய்யப்படாதது | டிசம்பர் 31, 2022 தணிக்கை செய்யப்படாதது | டிசம்பர் 31, 2023 தணிக்கை செய்யப்படாதது | டிசம்பர் 31, 2022 தணிக்கை செய்யப்படாதது | மார்ச் 31, 2023 தணிக்கை செய்யப்பட்டது |
| 1 | செயல்பாட்டுவகை மொத்த வருமானம் (நிகர் விற்றமுதல் உட்பட) | 0.02 | – | 2.25 | 14.33 | 10.87 | 95.77 |
| 2 | காலத்திற்கான நிகர் இலாபம் / நஷ்டம் (வரி, விதிவிலக்கான பொருட்கள்) | (686.33) | (584.18) | 812.57 | (2,125.19) | (2,385.35) | (5,135.71) |
| 3 | வரிக்கு முன்னான காலத்திற்கான நிகர் இலாபம் / நஷ்டம் (விதிவிலக்கான பொருட்களுக்கு பின்) | 11,276.87 | (584.18) | 812.57 | 9,852.01 | (2,385.35) | (5,135.71) |
| 4 | வரிக்கு பின்னான காலத்திற்கான நிகர் இலாபம் / நஷ்டம் (விதிவிலக்கான பொருட்களுக்கு பின்) | 11,276.87 | (584.18) | 812.57 | 9,852.01 | (2,385.35) | (5,135.71) |
| 5 | மறு மதிப்பான வருவாய்கள் (நிகர்) | – | – | 14.44 | – | 43.39 | 57.76 |
| 6 | பங்குக் காலத்திற்கான மொத்த விரிவான லாப இழப்பு [லாபம் / நஷ்டம் மற்றும் மறு மதிப்பான வருவாய் (நிகர்) மற்றும் மற்ற விரிவான வருவாய் (நிகர்)] | 11,276.87 | (584.18) | (788.13) | 9,852.01 | 2,362.07 | (2,977.35) |
| 7 | பங்கு மூலதனம் (முகமதிப்பு) | 3,320.00 | 3,320.00 | 3,320.00 | 3,320.00 | 3,320.00 | 3,320.00 |
| 8 | இதர சமப்படுத்தாத இருப்பான ஒதுக்கீடுகள் (மறுமதிப்பீட்டு ஒதுக்கு அல்லாத அனைத்து இதர சமப்படுத்தாத இருப்பு) | NA | NA | NA | NA | NA | (23,205.94) |
| 9 | ஒரு பங்கின் வருவாய் (முகமதிப்பாண்டு ரூ. 10/-) (தொடர்ந்து மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்கு) | | | | | | |
| | (அ) அடிப்படை | 33.97 | (2.09) | (2.45) | 29.67 | (7.22) | (9.44) |
| | (ஆ) நிறை | 33.97 | (2.09) | (2.45) | 29.67 | (7.22) | (9.44) |

குறிப்புகள்: 31.12.2023 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான நிதிநிலை அறிக்கையானது, 30 ஜூலை 2024 அன்று நடைபெற்ற இயக்குனர்களின் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு, வரையறுக்கப்பட்ட மறுஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. மேலும் விவரங்களுக்கு, நிறுவனத்தின் இணையதளமான www.nooranfashions.com மற்றும் www.bseindia.com ஆகியவற்றை பார்க்கவும்.



NIPPO
நிப்பொ நேஷனல் லிமிடெட்
CIN: L31909TN1972PLC006196
பதிவு அலுவலகம்: 'லட்சுமி மேன்ஷன்', 4-வது தளம், எண். 609, மவுண்ட் ரோடு, சென்னை–600 006.
Tel: 044 28272711 / 044 28275653
Email ID: jsrinivasan@nippo.in Website : www.nippo.in
அறிவிப்பு
(கம்பெனியின் பைங்கூறுநிறங்களின் கவனத்திற்கு)
கம்பெனியின் பைங்கூறுகளை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி (இறுதியாய் சங்கேயின்றி கைக்கிற்கு மாற்றுதல்
செப்டம்பர் 7, 2018 முதல் அமுலுக்கு வந்துள்ள, கம்பெனி விவகாரங்களுக்கான துறை அமைச்சகத்தினால் (எஸ்சி) அறிவிக்கப்படு, முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கு வைப்பு) விதிகள், 2016 மற்றும் திருத்தியமைத்தல் விதிகள் 2015 ("விதிகள்") கீழான உங்ள விதிகளின்படி, இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.
விதிகளில் உள்ள பரிவேறு தேவைகளுக்கேற்பவு, 2015–17ஏவுக்கு தொடர்ந்து ஏழு ஆண்டுகள் அல்லது அந்தந்த மேலாக டிவிடெண்ட் கோரப்படாத பங்குகள் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு (இறுதியாய்) மாற்றப்படும் என்ற தகவலை சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு தனித்தனியாக கம்பெனி தெரிவித்துள்ளது.
அந்த பங்குதாரர்கள் மற்றும் இறுதியாய் சங்கேயின்றி கைக்கிற்கு மாற்றப்பட உள்ள பங்குகள் குறித்த விவரங்களை இணையதளம் www.nippo.in கம்பெனி பதிவேடுகளில் வெப்சைனாது. இறுதியாய் சங்கேயின் கைக்கிற்கு மாற்றப்பட உள்ள பங்குகள் மற்றும் பணம் பெறாத டிவிடெண்டுகள் பற்றிய விவரங்களை இணையதளம் www.nippo.in கம்பெனியின் வெப்சைனாதளத்தில் பார்க்கலாம் பங்குதாரர்கள் கோரப்பட்ட பங்குகள் மற்றும் பெறாப்பட்ட டிவிடெண்ட் தொகையை கம்பெனியிடமிருந்து கோரி பெற முடியாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.
மேற்கண்ட டிவிடெண்டை கோரிப் பெற பங்குதாரர்கள் தவறினால், 10 அக்டோபர் 2024–க்குள் பங்குதாரர்களின் பெயரில் பதிவாகி உள்ள கம்பெனியின் சமபங்குகளை இறுதியாய் ஆவணமுறின் இறுதியாய் சங்கேயின் கைக்கிற்கு மாற்றும் நடவடிக்கையை கம்பெனி மேற்கொள்ளும் பெறாமல் மேற்கொள்ளப்படுகிறது. மேற்கண்ட பங்குகளை மாற்றுவதற்கு முன்பு கோரப்பட்ட டிவிடெண்ட் தொகையை கம்பெனியிடமிருந்து கோரி பெற முடியாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.
தமிழன் அசரன், தலைவர் & முழுநேர நிர்வாக இயக்குனர்
DIN: 00199482



வீர டெக் வபாக் லிமிடெட்
WABAG
CIN : L45205TN1995PLC030231
பதிவு அலுவலகம்: 'வபாக் ஹவுஸ்', எண்.17, 200 அடி துண்டுச்சாலை - பல்லாவரம் (தெற்கு) சாலை, சண்முகப் நகர், சென்னை-600 117, தமிழ்நாடு, இந்தியா
Sustainable solutions, for a better life
தொலைபேசி எண்: +91-44-4213 2323 | தொலைநகல்: +91-44-4213 2324
மின் அஞ்சல்: secretarial@wabag.com | இணையதளம்: www.wabag.com
29வது வருடாந்திர பொதுக் கூட்டம் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு தகவல் அறிவிப்பு
அன்புள்ள உறுப்பினர்களுக்கு,
வெடாந்திர பொதுக்கூட்டம் அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்களை செயல்படுத்த வீர டெக் வபாக் லிமிடெட் (இனி "நிறுவனம்") 29வது வருடாந்திர பொதுக்கூட்டம் (இனி "AGM") ஆகஸ்ட் 14, 2024 அன்று மாலை 4.00 மணிக்கு (இனி "தேர்வு") வானொலி அலைவரிசை (VC) / இதர ஒளி ஒலி காட்சிகளின் (OAVM) மூலமாக நடைபெறும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
பொறுப்புகள் விலகலாக்கல் துறை அமைச்சகத்தினால் வெளியிடப்பட்ட பொது சுற்றறிக்கைகள் 09/2023 செப்டம்பர் 25, 2023-ன் படி செலுத்திய அறிவு எல்லைகளை பேரம் ஆய் இந்தியா (SEBI) 07.10.2023 தேதியிட்ட சுற்றறிக்கை மற்றும் SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2023/167, (கூட்டாக "சுற்றறிக்கைகள்" என குறிப்பிடப்படும்) நிறுவனம் / பங்கு மாற்று முகவர் / கையப் பங்கேற்காளர்கள் மின்னணுமுறை முகவரிகள் பதிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு அறிவிப்பு மற்றும் மார்ச் 31, 2023-ல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வருடாந்திர அறிக்கைகள் மற்றும் இதர சட்ட அறிக்கைகள் ஆகியவை நிறுவனத்தின் வருடாந்திர அறிக்கையை மின்னணு முறையில் செய்வதற்கான 23 ஜூலை, 2024 அன்று நிறுவனம் அனுப்பியுள்ளது.
29வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு விளக்க அறிக்கை மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவை நிறுவனத்தின் இணையதளம் www.wabag.com மற்றும் பங்கு வர்த்தக இணையதளங்களான BSE லிமிடெட் www.bseindia.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட் www.nseindia.com மற்றும் செண்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் ("CDSL") இணையதளமான www.evotingindia.com-ல் கிடைக்கும் என்பதை உறுப்பினர்கள் கவனத்துக்கு கொண்டுவரப்படுகிறது.
உறுப்பினர்கள் VC/OAVM மாநாடு மூலம் பங்குபெற்று தேர்வு கூட்டத்தில் பங்கேற்க முடியும். வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்க குத்தாக வழங்கப்படுவதுடன் மேலும் செப்டம்பர் 13, 2023 தேதியிட்ட சுற்றறிக்கை 103-ன் கீழ் VC/OAVM மூலம் பங்கேற்கும் முறைகளுடன் கணக்கிடப்பட்டுள்ளது. அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ளது. இந்த விளக்கம் 29வது வருடாந்திர பொதுக்கூட்டத்தின் அறிவிப்பு மற்றும் சுற்றறிக்கைகளுக்கு பொருந்தும்.
நிறுவனங்கள் சட்டம் 2013 பிரிவு 91 மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளிப்படுத்தல்கள்) ஒழுங்கு 2015-ன் விதி 42-ன் படி, உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு மாற்று புத்தகங்கள் மூடுவிழாவை, ஆகஸ்ட் 07, 2024 முதல் புதன் கிழமை, ஆகஸ்ட் 14, 2024 முடிய இந்த நாட்களும் உட்பட மூடப்படுகிறது.
MCA சுற்றறிக்கைகள் / SEBI சுற்றறிக்கைகளுக்கு இணங்க VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக்கூட்டம் நடத்துவதுடனும், அதன் படி நிறுவனங்கள் சட்டம் 2013 பிரிவு 108 விதி 20 செக்யூரிடிகளுக்கு, நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014-ஐவிடவும் திருத்தப்பட்டு மற்றும் SEBI LOOR - 2015-ன் ஒழுங்கு முறை 44-ல் படி, வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கண்டுள்ள அனைத்து தீர்மானங்கள் மீது உறுப்பினர்கள் வாக்களிக்க வாரியம் CDSL அளிக்கும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதியை வழங்கியுள்ளது. மின்னணு வாக்குப்பதிவு மூலமாகவோ அல்லது வாக்குச்சீட்டு மூலமாகவோ வாக்களிக்க உறுப்பினர்கள் தகுதியுடையவர்கள் ஆவார்கள். / மின்னணு வாக்குப்பதிவுமுறை மின்னணு தகவல்களை அனுப்பியுள்ளது. அறிவிப்பில் தரப்பட்டுள்ள அலுவல்களை செயல்படுத்த உறுப்பினர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு அனுப்பப்படுகிறது.
1. காரத்த வருகைச்சீட்டை வைத்திருக்கும் உறுப்பினர்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத உறுப்பினர்கள் VC / OAVM மூலம் பங்கேற்குமாறு வழிமுறைகள் மற்றும் மின்னணு வாக்கு பதிவின் விவரங்கள் / கடவுச்சொல் ஆகியவை மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்கக் கோரப்பட்டுள்ளன. மேலும் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.
2. கணக்கீடு தேதியான முன்னிருந்தால், ஆகஸ்ட் 07, 2024 அன்று உறுப்பினர்களின் பதிவேடு அல்லது லாபப் பகிர்வுகளுக்கான பரமாரிப்பேடு மற்றும் நலன்களுக்கு உரிமையுடையவர்களின் பதிவேடு மற்றும் உள்ள பெயர்கள் உள்ள உறுப்பினர்கள் மட்டுமே வருடாந்திர பொதுக்கூட்டத்தில் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு / மின்னணு வாக்குப்பதிவு மூலமாக வாக்களிக்க தகுதி உடையவர்கள் ஆவார்கள்.
3. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு: விக்ராந்த்குமார், ஆகஸ்ட் 08, 2024 மாலை 5.00 மணிக்கு (இந்திய நேரப்படி) தொடங்கி கொள்ளப்படுகிறது. ஆகஸ்ட் 13, 2024 மாலை 5.00 மணிக்கு (இந்திய நேரப்படி) முடிவடைந்து தொடர் குறிப்பிட்டுள்ள தேதி மற்றும் நேரத்திற்கு பிறகு உறுப்பினர்கள் வாக்களிக்க முடியாது.
4. வருடாந்திர அறிக்கை அனுப்பிய பின்னர் பங்குதாரர் பெற்று தகுதியான உறுப்பினர்கள் மற்றும் கடைசி தேதியான ஆகஸ்ட் 07, 2024 தனது பங்குதாரர் வைத்துள்ளார் இருவரக்கு இதன் தகவல்களை பெற்றால் உறுப்பினர் ஆகலாம்.
5. வருடாந்திர பொதுக்கூட்டத்தில் முன்னர் கொண்டுவர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்களிக்கும் உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்கலாம் ஆனால் மின்னும் வாக்களிக்க உரிமை இல்லாது. தொலைதூர மின்னணு வாக்குப்பதிவில் மூலம் வாக்களிக்காமல் VC/OAVM வழியாகவோ பொதுக்கூட்டத்தில் வாக்கெடுப்பு மூலமாகவோ உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்க தகுதி உடையவர்கள் ஆவார்கள்.
6. மின்னணு வாக்குப்பதிவு நடைமுறைகள் தேர்வாயமைவு, மெயிட்டையான முறைமுறைகள் நடைபெறுவதற்கு ஆகவே M.தாமோதரன் & அசோசியேட்ஸ் LLP, நிறுவன செயலாளர்கள், சென்னை-ன் நிறைவு பெறுவதாக கிருத்திகா ராஜா அவர்கள் இணையாக பரிசீலனை மேற்கொள்ளுமாறு நிறுவனம் அமைவுபெற்றுள்ளது. ஆய்வாளரால் நிறுவனத்திடம் தெரிவிக்கப்படுகிறது.
7. நிறுவனங்கள் அலுவல் தகவல்களை தெரிவிப்பதுடன் தகவல் பரவலாக வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரியை வைப்புநிதியாக பராமரிப்பாளர்களிடம் பதிவு செய்து கொள்ளவேண்டும் மற்றும் வாக்கு வைத்திருக்கும் பங்குகளை வைப்புநிதியாகவும் வெயிட்ட வாக்குப்பதிவு, சான்றிதழ் எண்.1, முதலாவது மாடி, ஸ்ரீ ராம் ஸ்ட்ரீட், சிட்டி ஸ்ட்ரீட், சென்னை - 600 002 அவர்களுக்கு எழுதி மூலமாக அனுப்பி தங்கள் பிரிவு மற்றும் முகவரியை பதிவு செய்துகொள்ளவேண்டுகிறோம்.
8. மின்னணு முறையில் வாக்குப்பதிவு தொடர்பாக ஏதேனும் கேள்விகள் / குறைகள் இருப்பின் அது குறித்து / குறியீடுகளை கீழுள்ள அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) மற்றும் helpdesk.evotingindia@cdslindia.com (CDSL வலைதளம்) மூலம்தான் பிரிவில் உள்ள பின்னணுவாக்குப்பதிவு கையேடுகளை பார்க்கவும்.
9. மின்னணு முறையில் வாக்குப்பதிவு தொடர்பாக ஏதேனும் கேள்விகள் / குறைகள் இருப்பின் அது குறித்து / குறியீடுகளை கீழுள்ள அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) மற்றும் helpdesk.evotingindia@cdslindia.com (CDSL வலைதளம்) மூலம்தான் பிரிவில் உள்ள பின்னணுவாக்குப்பதிவு கையேடுகளை பார்க்கவும்.
10. ஏதேனும் கேள்விகள் / குறைகள் இருப்பின் அது குறித்து / குறியீடுகளை கீழுள்ள அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) மற்றும் helpdesk.evotingindia@cdslindia.com (CDSL வலைதளம்) மூலம்தான் பிரிவில் உள்ள பின்னணுவாக்குப்பதிவு கையேடுகளை பார்க்கவும்.
11. 2023-24 நிதியாண்டுக்கான நிறுவனத்தின் வருடாந்திர அறிக்கையை www.wabag.com-ல் கிடைக்கப்பெறுவீர்.
வீர டெக் வபாக் லிமிடெட்-க்காக
ஒப்பம்/-
அனுப் குமார் சுமார்
கம்பெனி செயலாளர் & இணைக்க அதிகாரி
உறுப்பினர் எண்: F4832
தேதி: 23.07.2024
இடம்: சென்னை


## ENROLLMENT NOTICE

After 10 days of the publication of this notice and within Three months thereafter, I, **GOUTHAM P** S/o S PRABHU KANNAN, aged 23 years, permanently residing at Plot No.31, Main Road, Balaji Nagar, Kattur, Trichy - 620019. Intend having my enrollment as an Advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Building, High Court Campus, Chennai - 600 104.

Those who have any valid objection may notify the same to the Bar Council within 10 days.

**GOUTHAM P**

## ENROLLMENT NOTICE

After 10 days of the publication of this notice and within Three months thereafter, I, **NIRMAL K.U** S/o KUMAR P, aged 23 years, permanently residing at No.28, Vin Nagar, 11th Cross, Kattur, Trichy - 620019. Intend having my enrollment as an Advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Building, High Court Campus, Chennai - 600 104.

Those who have any valid objection may notify the same to the Bar Council within 10 days.

**NIRMAL K U**

## பெயர் மாற்றம்

நான், சசிகலா மோகன் W / O S. M. மோகன் பிறந்த தேதி- 8.11.1970 தே.பி, பக்கிர் சாஹிப் தெரு. முதல் சந்து, திருவல்லிக்கேணி, சென்னை 600005 முகவரியில் வசிக்கும் நான் இனிமுதல் சீனிவாசன் மோகன் சசிகலா (Srinivasan Mohan Sasikala) என அழைக்கப்படுவேன்.

-சசிகலா மோகன்

## பெயர் மாற்றம்

நான், M.மோகன் S/o செங்குமுருகயா பிறந்த தேதி- 12.5.1963 தே.பி, பக்கிர் சாஹிப் தெரு. முதல் சந்து, திருவல்லிக்கேணி, சென்னை 600005 முகவரியில் வசிக்கும் நான் இனிமுதல் S.M.மோகன் என அழைக்கப்படுவேன்.

-M.மோகன்

## ENROLLMENT NOTICE

After Ten days of the publication of this notice and within Three months thereafter I, **SANTHOSHKUMAR.K,** S/o: k.karthick, aged 23 years, permanently residing at No.8422,Kannagi Nagar, Okkiyam, Thuraipakkam, Chennai -600097, intend having my enrollment as an Advocate moved Before the Bar Council of Tamilnadu and Puducherry, Bar Council Building, High Court Campus, Chennai-600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

**SANTHOSHKUMAR.K**

## ENROLLMENT NOTICE

After Ten days of the publication of this notice and within Three months thereafter I, **M.BHAVANI,** D/o: C.Manibalan, aged 34 years, permanently residing at New No.11/7, Old No.161, Vellalar Street, Purasawalkam, Chennai 600084, intend having my enrollment as an Advocate moved Before the Bar Council of Tamilnadu and Puducherry, Bar Council Building, High Court Campus, Chennai-600 104. Those who have any valid objections may notify the same to the Bar Council within Ten days.

**M.BHAVANI**

மேன்மைமிகு நிரந்தர லோக் லோட்டர் மாவட்ட விடுதி இரண்டாம் நீதிபதி கோதுமிகை நிர்பயாவை அவர்கள் முன்னர்

I.A. No. 842/2023 in M.COP. No. 384/2024

விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், தென்கோடிப்பாக்கம் கிராமத்தில் வசிக்கும் ஏழுமலை குமரர் எழிலரசு, வயது 32

எதிர்

காகுபிரியம் மாவட்டம், பட்டமை வெள்ளாமாதூர்கல், பழனை கிராமம் தெரு, தெ. 4/46 வசிக்கும் கன்னியப்பன் குமரர் தீனன்

... 2வ எதிர்மனுதாரர்

இந்த தெம்பர் மனுதாரர் எழுவம் எதிர்மனுதாரர்கள் மேலே விடுத்தினால் அவருக்கு ஏதுபட்ட கொடுங்கையங்களுக்கு இழப்பீடு கோரி மனு தாக்கல் செய்து மனுதாரர் தாக்கல் செய்த அசல் மனு தள்ளுபடி செய்யப்பட்டதால் மேற்படி அசல் மனுவினை மீண்டும் கோப்பிற்கு ஏடுக்க I.A.No.842/2023 மனுவினை மற்று தாக்கல் செய்து, மேற்படி மனுவில் 1வ எதிர்மனுதாரர்கள் தாக்கல் எழுவம் நிதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனை தெரிவித்த 08.08.2024 அன்று வாய்தா வைக்கப்பட்டுள்ளது. மேற்படி தேதியன்று காலை 10.00 மணிக்கு தாங்கள் தேரிவே அலுவலு வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபனை தெரிவிக்க வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இந்த அறிவிப்பு மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

V.சம்பகுமார், வழக்கறிஞர், தெய்வேயி

வேளாண்மை சார்பு நிதிமன்றம், தெய்வேயி

O.S. 83/2023

முருகேசன், த/பெ.பழனிசாமி அரங்கப்பன்கள், ரவிவலை ஆண்டிக்குப்பம், குறிஞ்சிப்பாடி வட்டம்

...வாதி

எதிர்

அம்பிள, க/பெ.வேலுபாபு 469, தேப்பெருங்குடி, கண்ணாடி, குறிஞ்சிப்பாடி வட்டம் ...பிரதிவாதி

அறிவிப்பு

இந்த அறிவிப்பின் மூலம் தங்களுக்கு தெரிவிப்பதாவது தாங்கள் மீது மேற்படி வாதி அவர்கள் கூடுதலுதி கீழான பொருட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கு எதிர்வரும் 28.08.2024 அன்று வாய்தா வைக்கப்பட்டுள்ளது. எனவே தங்களுக்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின் மேற்படி தேதியில் காலை 10.00 மணிக்கு தாங்கள் தேரிவே அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜர் ஆகி தங்கள் ஆட்சேபனையை தெரிவிக்குமாறு கேட்கவேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்று இந்த அறிவிப்பு மூலம் தங்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

V. சம்பகுமார், வழக்கறிஞர், தெய்வேயி

## IN THE COURT OF THE HON'BLE VI SMALL CAUSES COURT AT CHENNAI

**M.C.O.P. No. 7443/2017**

1. Priya, Wio Vijayakumar
2. Minor Manikandan

Rep by mother and next friend Of 1st Petitioner ...Petitioners

v.

1. George Hamlet Raja P.
2. HDFC ERGO General Insurance Co. Ltd., Represented by its Manager ...Respondents

HEARING NOTICE

Please take notice that the above matter filed by Priya and Anr. against you came up on 15.07.2024 before the Hon'ble VI Small Causes Court, Chennai. The Hon'ble Court ordered to issue notice through paper publication to the 1st Respondent. The above matter is posted on 19.08.2024 for the appearance of the 1st Respondent i.e. George Hamlet Raja. P, No.85/28, Block A, 1st Street, Bhar

## ஆம்ஸ்ட்ராங் வழக்கில் மேலும் ஒருவர் கைது

சென்னை, ஜூலை 24–

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு தொடர்பாக ஆற்காடு சுரேஷின் கூட்டாளி வைரமணி என்பவரை போலீசார் கைது செய்துள்ளனர்.

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங் கடந்த 5 ஆம் தேதி பெரம்பூர் செம்பியம் பகுதியில் வெட்டுப் படுகொலை செய்யப்பட்டார். இந்த கொலை தொடர்பாக பொன்னை பாலு, அருள், அஞ்சலை, மலர்க்கொடி உள்ளிட்ட 16 பேரை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

அவர்களிடம் இருந்து செம்பட்டப் வாக்குமூலத்தின் அடிப்படையில் பிரபல ரவுடி சம்போ செந்தில், திங்க் ராஜா உள்ளிட்ட ரவுடிகளை போலீசார் தேடி வருகின்றனர். அவர்களை பிடிக்க 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவர்களை ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தீவிரமாக தேடி வருகின்றனர்.

இந்த நிலையில், ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சென்னையில் இருந்த வைரமணி, ஆம்ஸ்ட்ராங்கின் கொலைக்குப் பின்பு சொந்த ஊரான வீரநல்லூர் சென்று பதுங்கி இருந்ததாக தகவல் கிடைத்தை அடுத்து தனிப்படை போலீசார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது திருநெல்வேலியில் வைத்து வைரமணியை போலீசார் ஈடுபட்டனர். வைரமணி ஆற்காடு சுரேஷின் கூட்டாளி என்பது போலீஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

## நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் அமளி....

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிதலைவர் சேரந்த எம்.பி.க்கள் நாடாளுமன்ற வளாகத்தில் முன்னதாக இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

டெல்லியில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே இல்லத்தில் நேற்று இரவு நடைபெற்ற இந்தியா கூட்டணி கட்சி தலைவர்கள் கூட்டத்தில் நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டம் நடத்த முடிவெடுக்கப்பட்டது. அதேபோல் ஜூலை 27ம் தேதி பிரதமர் தலைமையில் நடைபெறும் நிதி ஆயோக் கூட்டத்தை இந்தியா கூட்டணி ஆட்சி செய்யும் மாநில முதல்வர்கள் புறக்கணிக்க உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மத்திய பட்ஜெட்டில் பாரபட்சம் காட்டப்படுவதாக கூறி, அதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சிகளின் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே, காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சோனியா காந்தி, சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவ் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

மேலும் காங்கிரஸ், தி.மு.க., சமாஜ்வாதி, ஆம் ஆத்மி, சிவசேனா (உத்தவ் அணி), நிரினமூல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் எம்.பி.க்கள் பதாகைகளுடன் முழக்கமிட்டனர்.

தமிழ்நாடும் இல்லை.. திருக்குறளும் இல்லை, தமிழத்துக்கு நிதி எங்கே? போன்ற பதாகைகளுடன் தமிழகத்தை சேர்ந்த எம்.பி.க்கள் போராட்டத்தில் பங்கேற்றனர்.

### பட்ஜெட்டில் எந்தவிதமான திட்டங்களையும் அறிவிக்கவில்லை

# தமிழகத்தின் மீது மத்திய அரசுக்கு காழ்ப்புணர்ச்சி: எடப்பாடி குற்றச்சாட்டு

### 'பாரபட்சமாக செயல்படுகிறார்கள்'

சென்னை, ஜூலை 24–

தமிழகத்துக்கு மத்திய பட்ஜெட்டில் எந்த திட்டங்களும் அறிவிக்கப்படாதது, தமிழகத்தின் மீது மத்திய அரசுக்கு உள்ள காழ்ப்புணர்ச்சியை காட்டுகிறது என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

2024–2025–ம் ஆண்டுக்கான மத்திய நிதிநிலை அறிக்கையில் தமிழகத்திற்கு எந்தவிதமான புதிய திட்டங்களும் அறிவிக்கப்படாதது பெருத்த ஏமாற்றத்தை அளிக்கிறது.

மத்திய நிதி அமைச்சர் நேற்று 2024–2025–ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளார். அதன் முன்னெடுப்பாக 22–ந் தேதி பாராளுமன்றத்தில் தாக்கல் செய்த 2023–2024–ம் ஆண்டுக்கான பொருளாதார ஆய்வு அறிக்கையில், நடப்பு நிதி ஆண்டில் 6.5 முதல் 7 சதவீதம் வரை நிலையான விலை விகிதப்படி (Constant prices) பொருளாதார வளர்ச்சி விகிதம் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 8.2 சதவீதத்தைவிட குறைவாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார ஆய்வு அறிக்கையின்படி வேலை வாய்ப்பை உருவாக்குதல், திறன் மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் அளித்தல், வேளாண்துறை மேம்பாடு, செயற்கை நுண்ணறிவு மூலம் தொய்வடைந்துள்ள தொழில்நுட்பத் துறையை மேம்படுத்துதல் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், இன்று தாக்கல் செய்யப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையில் ஒருசில அம்சங்கள் உள்ளன.

தற்போதைய அறிவிப்புகள் மூலம் விவசாயிகள் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்காது.

★ அடுத்தகாக, இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பை உருவாக்குதல் மற்றும் அவர்களை தொழில் துறையில் தேவைப்படும்வேலைவாய்ப்புகளுக்கு தயார்படுத்துதல் போன்றவற்றில் ஒருசில அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதுதவிர, திறன் மேம்பாட்டிற்கான முயற்சிகள், சிறு, குறு தொழில்களுக்கு கடன் வழங்குவதில் சில சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது.

ஆனால், கள அளவில் இந்த உதவிகளைப் பெறுவதில் பல சிரமங்கள் உள்ளன. எனவே, திறன் பயிற்சி வழங்குவதிலும், சிறு, குறு தொழில்களுக்கு கடன் வழங்குவதிலும் உள்ள செயல்முறை நிதியான பிரச்சனைகளைத் தீர்க்க வழிவகை காண வேண்டும் என்பதே என்னுடைய கருத்து.

★ பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க, கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த கணிசமான நிதியை ஒதுக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஏன் இந்த பாரபட்சம்**

ஆனால், இந்த நிதியில் பெரும் பகுதி தற்போது ஆட்சியிலுள்ள அரசின் கூட்டணிக் கட்சிகள் ஆட்சி செய்யும் பீகார், ஆந்திரா போன்ற மாநிலங்களுக்கு தொழில் வழிப்பாதை, சாலை கட்டமைப்பு மேம்பாடு, புது விமான நிலையங்கள், மருத்துவக் கல்லூரிகள், புதிய மின் திட்டங்கள், ஆந்திர பிரதேசத்திற்கு புதிய தலைநகரங்கள் திட்டம், நீர் ஆதார திட்டங்கள் என பல திட்டங்களுக்கு குறிப்பிட்ட மாநிலங்களுக்கு மட்டும் சலுகைகளை வழங்கியிருப்பது, மத்திய அரசின் பாரபட்சமான நிலையைக் காட்டுகிறது.

★ கோதாவரி – காவிரி இணைப்பு போன்ற திட்டங்கள் தமிழகத்தினால் முன்மொழிந்த போதிலும், மத்திய அரசு இதனை கண்டுகொள்ளாமல் விட்டது, தமிழக விவசாயிகளுக்கு பெரிய ஏமாற்றத்தை அளிக்கிறது.

அதேபோல், இதே மத்திய அரசு அறிவித்த ஒகுடி, கோயம்புத்தூர் பானுகாப்புதளவாடங்கள் தொழில்வழி திட்டமும் அறிவிப்பு செய்ததோடு கிடப்பில் போடப்பட்டுள்ளதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல், நடந்தூர் வாழி காவிரி திட்டம் (காவிரிமைதுய்மைப்படுத்தும் திட்டம்) பற்றி ஜவஹர்லிபுநி அறிவிப்பில் அறிவித்ததோடு, இத்திட்டத்திற்கு தேவையான நிதியினை ஒதுக்காமல் தமிழகத்திற்கு மத்திய அரசு பாரபட்சம் காட்டியுள்ளது.

வெள்ளத் தடுப்பு பணிகளுக்கும் பீகார், அசாம், இமாச்சல் பிரதேசம், உத்திரகாண்ட், சிக்கிம் போன்ற மாநிலங்களுக்கே பெருந்தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற திட்டங்கள் எதுவும் தமிழகத்திற்கு அறிவிக்கப்படாதது ஒரு பெருத்த ஏமாற்றமாகும்.

★ எப்போதும் செயல்படுத்துவ ஊரக வளர்ச்சி திட்டங்கள், நகர்புற மேம்பாட்டு திட்டங்கள் போன்றவை அறிவிக்கப்பட்டுள்ளன. பல அறிவிப்புகள் வரி சீர்திருத்தம் போன்றவை அறிவிக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் செயல்படுத்தி எந்த அளவுக்கு வரி விதிப்பு முறைகள் எளிமைப்படுத்தப்படும் என்பதையும், அதனால் வரி செலுத்துவோரின் சிரமங்கள் குறைகிறதா என்பதையும் நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இந்த தருணத்தில் ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு முறை கொண்டு வந்த பின்பும், தொழில் முனைவோர் பல்வேறு நடைமுறை சிரமங்களைத் தொடர்ந்து சந்தித்து வருகின்றனர் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

★ வரி விதிப்பைப் பொறுத்தவரை, சுங்க வரி விதிப்பில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதனால் உள்நாட்டு உற்பத்தித் திறனும், போட்டியிடும் திறனும் அதிகரிக்கும் என கூறப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்க ஒன்றுதான்.

எனினும் நேரடி வரி விதிப்பில், புதிய வரி விதிப்பு முறையைப் பின்பற்றுவோருக்கு மட்டும் ஆண்டுக்கு ரூ. 17,500 சேமிக்கக்கூடிய அளவில் வரி விதித்தலில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது இன்றைய சூழ்நிலையில் போதுமானதாக இல்லை என்பது என்னுடைய கருத்து. இதனால் வரி விதிப்பில் மாற்றம் வரும் என்று எதிர்பார்த்திருந்த பொதுமக்கள் மத்தியில் இது ஒரு பெருத்த ஏமாற்றமே.

★ இதுதவிர, பங்குச் சந்தை வரிவிதிப்பு முறையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

★ பொதுவாக, கார்ப்பரேட்டுகள் அதிக லாபம் ஈட்டுகின்றனர் என்று பொருளாதார ஆய்வு அறிக்கையில் குறிப்பிட்டிருந்தும் அந்த அதிக லாபத்தை, வேலைவாய்ப்பு உருவாக்குவதில் அவர்கள் இதுவரை பயன்படுத்தவில்லை என்றும் குறிப்பிட்டப்பட்டுள்ளது. அதை ஊக்குவிப்பதற்கான எந்த அறிவிப்பும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை.

எனவே, தனியார் துறை ரூபாய் அதிக வேலைவாய்ப்பை உருவாக்குவது என்பது எந்த அளவு சாத்தியம் என்று தெரியவில்லை.

★ மத்தியில் ஆட்சி செய்யும் பா.ஜ.க.வின் நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில் அளித்த பல வாக்குறுதிகள் இந்த வரவு, செலவுத் திட்ட அறிக்கையில் இடம்பெறவில்லை என்பது மக்களுக்கு பெருத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது.

★ இந்த வரவு, செலவு அறிக்கையில் முதியவர்களுக்கான எந்த சலுகைகளும் அறிவிக்கப்படவில்லை. முதியோர்களுக்கு கொரோனா காலத்திற்கு முன்பு நடைமுறையில் இருந்த சலுகைகளையாவது திரும்ப அளித்திருக்கலாம்.

எனவே, இந்த வரவு, செலவு அறிக்கை வடமாநிலங்களையும், பா.ஜ.க.வின் கூட்டணிக் கட்சிகள் ஆளும் மாநிலங்களையும் திருப்திபடுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதே தவிர, ஒட்டுமொத்த இந்தியத் திருநாட்டின் பொருளாதார வளர்ச்சியை சமநிலையோடு ஊக்குவிக்கக்கூடிய அறிக்கையாக இது இல்லை.

**தமிழகத்தின் மீது காழ்ப்புணர்ச்சி**

குறிப்பாக தமிழகத்திற்கு எந்தவிதமான திட்டங்களும் அறிவிக்கப்படவில்லை என்பது, தமிழகத்தின் மீது மத்திய அரசுக்கு உள்ள காழ்ப்புணர்ச்சியையே காட்டுகிறது. தமிழகத்திற்கு ஏதாவது நன்மை கிடைக்கும் என்று தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சியினருக்கு வாக்களித்து, 39 நாடாளுமன்ற உறுப்பினர்களை தமிழக மக்கள் வெற்றிபெறச் செய்தார்கள். தி.மு.க. கூட்டணிக் கட்சிகளுக்கு 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும், தமிழகத்திற்கு எந்த ஒரு திட்டத்தையும் பெற்றுத் தராதது பெருத்த ஏமாற்றத்தை அளிக்கிறது. தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தில் 2019 முதல் 2024–ம் ஆண்டுவரை தமிழகத்தின் நன்மைக்காக எந்த முயற்சியையும் மேற்கொள்ளாமல் இருந்தது போல், அமைதியாக காலம் தள்ளுவார்களா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

மக்கள்குரல்
24-7-2024

## வரிச் சலுகைகள்: பட்ஜெட் அறிவிப்பின் தாக்கங்கள்

2024 பட்ஜெட்டில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்துள்ள வரி மாற்றங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்த மாற்றங்கள் வரி செலுத்துபவர்களுக்கு நிவாரணம் அளிக்கின்றன, அதேசமயம் அரசின் வருவாய் தேவைகளையும் சமநிலைபடுத்துகின்றன. மக்களுக்கும் நிறுவனங்களுக்கும் இதன் தாக்கங்கள் மற்றும் நன்மைகள் பற்றிய ஒரு அலசல் இங்கே.

**பிரதான மாற்றங்கள்:**

**வரியில்லாத வருமானம்:** ₹3 லட்சம் வரை: வரிவிலக்கு வரம்பு ₹2.5 லட்சத்தில் இருந்து ₹3 லட்சமாக உயர்த்துள்ளது, குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு கூடுதல் நிவாரணம் அளிக்கிறது.

**₹3–7 லட்சம் வருமானத்திற்கு 5% வரி:** நடுத்தர வர்க்கத்திற்கு பயனளிக்கும் குறைந்த வரி விகிதம், அதிகப்படியான செலவுகளுக்கு உதவுகிறது.

**₹7–10 லட்சம் வருமானத்திற்கு 10% வரி:** மிதமான அளவிலான குறைப்புகள், வரி வருவாய் இழப்பை குறைப்பதற்கு உதவுகிறது.

**₹10–12 லட்சம் வருமானத்திற்கு 15% வரி:** புதிய நிலை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் முன்னேற்றம் அடையும்படி விறுவிறுப்பாக உள்ளது.

**மாதாந்த விகிதங்கள்**

₹12–15 லட்சம் வருமானத்திற்கு 20%, மேலும் ₹15 லட்சம் மேல் வருமானத்திற்கு 30% ஆகியவை மாறாமல் உள்ளன.

**தனிநபர்களுக்கு**

1.அதிகப்படியான நிலுவை வருமானம்: வரிவிலக்கு வரம்பு உயர்த்தப்பட்டதால் மற்றும் குறைந்த விகிதங்கள் கொண்டு, தனிநபர்களின் நிலுவை வருமானம் அதிகரிக்கும். இதனால் அதிகமான நுகர்வு செலவுகள் மேற்கொள்ளப்படலாம், பொருளாதார வளர்ச்சிக்கு தூண்டுதலாக இருக்கும்.

2. வரிச் சுமை குறைவு: நடுத்தர வர்க்கத்திற்கான குறைந்த வரி விகிதங்கள் நிவாரணத்தை வழங்குகின்றன, இது நிதி அழுத்தத்தை குறைத்து சேமிப்புகளையும் முதலீடுகளையும் ஊக்குவிக்கிறது.

3. எளியைாக்கம், ஒழுங்குமுறை: புதிய வரி நிலைகள் வரிவிதியை எளிமையாக்குகின்றன, இது வரி செலுத்துபவர்கள் எளிதில் இணைந்துகொள்ள உதவுகிறது மற்றும் நிர்வாக சுமையையும் குறைக்கின்றது.

**நிறுவனங்களுக்கு தாக்கங்கள்:**

1. நுகர்வோர் செலவுகள் அதிகரிப்பு: நுகர்வோர் நிலுவை வருமானம் அதிகரிப்பதால், பல துறை நிறுவனங்களுக்கு கூடுதல் தேவையைக் கொண்டு வருகிறது.

2. சம்பள சரிசெய்தல்: நடுத்தர வர்க்க ஊழியர்களுக்கு பயன்படும் புதிய வரி நிலைகளை கருதில் கொண்டு நிறுவனங்கள் சம்பளங்களை மாற்ற நேரிடலாம்.

3. பொருளாதார வளர்ச்சி:

4. நுகர்வோர் செலவுகள் மற்றும் சேமிப்புகளை அதிகரிப்பதால், புதிய வரி அமைப்பு பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும், இதனால் நிறுவனங்கள் வளர்ச்சியை காணும்.

2024 பட்ஜெட்டின் புதிய வரி நிலைகள் குறைந்த மற்றும் நடுத்தர வர்க்கத்தினருக்கு நிவாரணம் வழங்குவதை குறிக்கின்றன, மேலும் முன்னேற்றம் அடையுமாறு சமநிலை செய்யப்பட்டுள்ளது. தனிநபர்களுக்கு மிக முக்கியமான தாக்கங்கள் உள்ளன, குறிப்பாக நிலுவை வருமானம் அதிகரிப்பு மற்றும் குறைந்த வரி கமை. நிறுவனங்களுக்கு, இந்த மாற்றங்கள் நுகர்வோர் தேவையை ஊக்குவித்து பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க உதவும். மொத்தத்தில், புதிய வரி அமைப்பு வரி செலுத்துபவர்களின் நிவாரணத்தை அரசின் நிதி பொறுப்புகளுடன் சமநிலைப்படுத்தும், ஒரு சேர்க்கையான மற்றும் ஆரோக்கியமான பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு உதவும்.

153 மில்லியன் மூத்த குடிமக்கள் அடங்கிய இந்தியாவின் 'வெள்ளி படை' நிதி கமைகள் மற்றும் வயது முதிர்வுக்கு பொருவான கவாதரவ சவால்களில் இருந்து தப்பிக்க எதிர்பார்த்தது.

ஆனால் மூத்த குடிமக்கள் புறக்கணிக்கப்பட்டதாக அப்பட்டமாக தெரிகிறது. இது பற்றி மேலும் விரிவாக மக்கள் குரல் இணைய குழுமத்தின் ஆய்வுகளை நாளை பாரப்பேம்!

## இந்தியாவுக்கு எதிரான டி20 தொடர்: இலங்கை அணி கேப்டனாக அசலங்கா நியமனம்

பல்லகெலெ, ஜூலை 24

இந்தியாவுக்கு எதிரான டி 20 போட்டி தொடரில் இலங்கை அணியின் கேப்டனாக அசலங்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கு சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி மூன்று 20 ஓவர் மற்றும் 3 ஒருநாள் போட்டியில் விளையாடுகிறது. இந்தியா இலங்கை அணிகள் இடையிலான 20 ஓவர் போட்டி வருகிற 27, 28, 30 ஆகிய தேதிகளில் பல்லகெலெவிலும், ஒருநாள் ஆட்டங்கள் ஆகஸ்ட் 2, 4, 7 ஆகிய தேதிகளில் கொழும்பிலும் நடக்கிறது.

இந்தியாவுக்கு எதிரான 20 ஓவர் தொடருக்கான இலங்கை கிரிக்கெட் அணி நேற்று அறிவிக்கப்பட்டது. கடந்த மாதம் நடந்த 20 ஓவர் உலகக் கோப்பை போட்டியில் இலங்கை அணி லீக் சுற்றுடன் வெளியேறியதை அடுத்து வனிந்து ஹசரங்கா கேப்டன் பதவியை ராஜினாமா செய்த நிலையில், தற்போது புதிய கேப்டனாக 27 வயது ஆல்ரவுண்டர் சாரித் அசலங்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

அசலங்கா இந்த ஆண்டு தொடக்கத்தில் நடந்த வங்காளதேச தொடரில் இரண்டு 20 ஓவர் போட்டிக்கு கேப்டனாக இருந்து இருக்கிறார். 19 வயதுக்கு உட்பட்ட இளங்கை அணியின் கேப்டன் போறுப்பை கவனித்து இருக்கும் அவர் கடந்த வாரம் நடந்த லங்கா பிரீமியர் லீக் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற ஜாப்னா கிங்ஸ் அணியின் கேப்டனாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆல்ரவுண்டர்கள் மேத்யூஸ், தனஞ்ஜெயா டி சில்வா, விக்கெட் கீப்பர் சந்திர சமரவிக்ரமா, இடக்கை வேகப்பந்து வீச்சாளர் நிஸ்ஸங்க மதுஷங்கா ஆகியோர் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். 34 வயது விக்கெட்கீப்பர் மற்றும் பேட்ஸ்மேனான தினேஷ் சன்டிமால் 2023ம் ஆண்டுக்கு பிறகு தற்போது 20 ஓவர் அணிக்கு திரும்பி இருக்கிறார். இதே போல் குசல் ஜனித் பெரேரா, வேகப்பந்து வீச்சாளர்கள் அவிஷ்கா பெர்னாண்டோ, பிஎுறா பெர்னாண்டோ ஆகியோரும் திரும்ப அழைக்கப்பட்டு உள்ளனர். 21 வயது ஆல்ரவுண்டர் சமிந்து விக்ரமசிங்க புதுமுக வீரராக இடம் பிடித்துள்ளார்.

20 ஓவர் போட்டிக்கான இலங்கை அணி வருமாறு:

சாரித் அசலங்கா (கேப்டன்), பதும் நிசாங்கா, குசல் ஜனித் பெரேரா, அவிஷ்கா பர்னாண்டோ, குசல் மெண்டிஸ், தினேஷ் சன்டிமால், சமிந்து மெல்டிஷ், தசுன் ஷனகா, ஹசரங்கா, துனித் வெல்லாலகே, நீக்ஷலா, சமிந்து விக்ரமசிங்க, பதிரானா, நுவன் துஷாரா, துஷ்மந்தா சமீரா, பிஎுறா பெர்னாண்டோ.

தமிழ் நாடு கூட்டுறவு அங்கீகாரம் பெற்றவர்கள்
புதிய அலுவலகம்: பிஸ்டா தனலட்சுமி, புதிய எண்.119 (பழைய எண்.57) கொப்பலிங்க சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 034
தொலைபேசி எண்.91-44-28311313 மின்னஞ்சல் எண்.0511-44-28203014
CIN-L15421TN1987PLC014894
பங்கேற்றுள்ளவர்: கார்ப்பரேட்/நிறுவனம்/தனிநபர்-வகை-மாநிலம் இணைவுகளுக்கு www.dhanalakshmibank.in
மார்ச் 31, 2024 க்கு அமைவாக நிதி கணக்கியல் மற்றும் வருவாய்க்கான அறிவுரைகளின் வரைவுகளில்,
கீழ் அமைவாகவே வெளியிடப்பட்டுள்ளது SEBI (LODR) ஒழுங்குமுறைகள் 47 (1) (b) ஒழுங்குமுறைகளை 2015

| வ. எண் | விவரங்கள் | காலாண்டு முடிவுகள் | | ஆண்டு முடிவுகள் | |
|---|---|---|---|---|---|
| | | மார்ச் 31, 2024 தணிக்கை செய்யப்பட்டது | டிசம்பர் 31, 2023 தணிக்கை செய்யப்படாதது | மார்ச் 31, 2024 தணிக்கை செய்யப்பட்டது | மார்ச் 31, 2023 தணிக்கை செய்யப்பட்டது |
| 1. | செயல்பாடுகளின் மொத்த வருமானம் (நிகர வருமானம் உட்பட) | 3.76 | 0.68 | 84.90 | 18.11 | 30.77 |
| 2. | காலத்திற்கான வரி (நிகர) மற்றும் அசாதாரண அம்சங்களுக்கான பொது காலத்திற்கு | (1,392.47) | (560.93) | (740.52) | (3,457.60) | (3,135.71) |
| 3. | வரிக்கு முந்தைய காலத்திற்கான லாபம் (நிகர) (அசாதாரண பொது காலத்திற்கு) | 2,290.36 | 11,279.87 | (740.52) | 12,132.39 | (3,135.71) |
| 4. | காலத்திற்கான லாபத்திற்கான லாபம் (நிகர) (அசாதாரண பொது காலத்திற்கு) | 2,290.36 | 11,279.87 | (740.52) | 12,132.39 | (3,135.71) |
| 5. | மொத்த விரிவான வருமானம் (நிகர வரி) | -- | -- | 14.44 | - | 57.28 |
| 6. | பங்குகள் வைத்திருப்பவர்களுக்கு விரிவான வருமானம் (காலத்திற்கு) [காலத்திற்கான லாபம் (நிகர வரி) மற்றும் மற்ற விரிவான வருமானம் (நிகர வரி)] | 2,290.36 | 11,279.87 | (725.96) | 12,132.39 | (3,077.99) |
| 7. | பங்கிலிருக்கு முகமதிப்பு | 3,309.00 | 3,309.00 | 3,309.00 | 3,309.00 | 3,309.00 |
| 8. | நிதி ஆட்டப்பட்டுள்ளபடி இருப்பிலுள்ள ஒதுக்கீடுகள் (மறுமதிப்பீட்டு ஒதுக்கீடு அல்லாதவை தவிர்த்து) | NA | NA | NA | (10,897.56) | (23,922.94) |
| 9. | வருவாய் பங்கின் வருவாய் (தொடர்வதற்கும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்கு) | | | | | |
| | அடிப்படை | 6.92 | 33.97 | (2.23) | 36.64 | (9.44) |
| | நிறை வைப்பாக | 6.92 | 33.97 | (2.23) | 36.64 | (9.44) |

குறிப்பு: மேலே உள்ளவை மார்ச் 31, 2024 இன் முடிவுகளுக்கு மைலாஸ் மற்றும் ஒரு குறிப்புகளின் தணிக்கை கமிட்டியால் கீழ் முடிவுகளின் விரிவான மறுஆய்வுக்கு வருகிறவைகள். 2024 ஆம் ஆண்டின் 25/07 மற்றும் வாரியக் கூட்டங்கள் மெய்ப்பிக்கப்பட்டு தேதியிடப்பட்டு, 33 நிதி சீர்மதிப்பாய் ஒழுங்குமுறைகளின் கீழ் கூடியிருக்கிறார்கள் மற்றும் www.bseindia.com மற்றும் www.nseindia.com ஆகிய பங்குச் ஒழுங்கு தளங்களுக்கான பட்டியல் பொறுப்புகளுடன் www.dhanalakshmibank.in இல் கிடைக்கும்.

தமிழ் நாடு கூட்டுறவு அங்கீகாரம் பெற்றவர்
பி.ஆர். ரமேஷ்
நிர்வாக இயக்குனர்
தேதி: 25.7.2024
DIN: 00041002

சிறுகதை

## பிரசவ அறை

(அறைகள் சொல்லும் கதைகள் 6)

ராஜா செல்லமுத்து

அந்த அரசு மருத்துவமனையில் தினம் தினம் பிறப்பு, இறப்பு நிகழ்ந்து கொண்டே இருக்கும். ஒரு பக்கம் சந்தோஷத்தின் சிரிப்பொலி. மறுபக்கம் அழுகையின் ஓலம் என்று இரண்டையும் சமமாகச் சுமந்து நிற்கும் அந்த மருத்துவமனை. உள்நோயாளிகள் புற நோயாளிகள் என்று ஆயிரக்கணக்கானவர்கள் வந்து போகும் அந்த இடத்தில் ஜோதிக்கு பிரசவறை மட்டும் தான் பிரதானம். அவள் வெள்ளை உடை உடுத்திய தேவதை. கோபம் என்பதை கொழுந்திலேயே கிள்ளி எறிந்து விட்டு அன்பை அடர்த்தியாய் அணிந்திருக்கும் அன்பு மகள். அவள் சிரித்து பேசும் போதே சிலருக்கு நோய்விட்டுப் போகும். பிரசவ வலியில் வரும் பெண்களை அவள் பிரியமாகத் தொட்டு

"ஒன்னும் இல்ல. இப்ப சரியாயிடும் இப்ப பாப்பா வந்துரும். பயப்படாதீங்க. எல்லா மனுஷங்களும் அப்படித்தானே பிரசவம்கிறது ஒரு பொண்ணுக்கு மறுபிறவிதான். ஆனா அதுதான் ஒரு பெண்ணின் பூரணம்" என்று அத்தனை ஆறுதல் வார்த்தைகளைச் சொல்வாள் ஜோதி.

அந்தக் கருணைக் குரலில் அத்தனை அடர்த்தியிருக்கும். இதுவரை அவள் பிறக்கும் எத்தனை சிசுக்களைச் சுமந்து இருப்பாள் என்று எண்ணிக்கை இல்லை. ரத்தமும் சதையுமாய் பிசுபிசுத்து வரும் குழந்தையை அவள் இரு கைகளில் ஏந்தி குழந்தைகளைக் கழுவமாலே தன் உதடுகளால் உச்சி மோந்து

" உங்களுக்கு ஆம்பள புள்ள பிறந்திருக்கு .உங்களுக்கு பொம்பள புள்ள பிறந்திருக்கு" என்று கண்களை அலல விரித்து அது வரை அழுது துடித்த அந்தத் தாயின் கரங்களில் குழந்தையைக் கொடுக்கும் போது ஜோதிக்கு அன்பு ஜோதியாய் மின்னும். அந்தப் பிரசவப் பணி அவளுக்கு அலுப்பு தட்டவே இல்லை. இந்த டூயிக்கு ஒரு உயிரைக் கொண்டுவெரும் ஒரு உயிரை முதன் முதலில் தரிக்கிது அதைத் தொட்டு தூக்கி தாயிடம் ஒப்படைக்கும் போது இருக்கும் ஒப்பற்ற பணியை இறைவன் தனக்கு இட்டதாகவே நினைப்பாள்.

அன்றும் அந்த மருத்துவமனையில் நிறையப் பெண்கள் நிறைமாத கர்ப்பினியாக இருந்தார்கள். அந்தக் கர்ப்பினிகளின் குடும்பம் அவர்களை கவனிக்கிறதோ இல்லையோ ஜோதி அவ்வளவு அக்கறையாக கவனிப்பாள். எப்படி நடக்க வேண்டும் ? எப்படிச் சாப்பிட வேண்டும் ? எப்படிப் படுக்க வேண்டும் என்பதெல்லாம் ஒரு எம்பிபிஎஸ் படித்த டாக்டர் போல அவ்வளவு அன்பாய் சொல்லிக் கொடுப்பாள். அன்று பத்து , பதினைந்து பெண்களுக்கு பிரசவ நாள் குறிக்கப்பட்டிருந்தது. அதிகமல ஐந்து மணியிலிருந்து அவளுக்கு பணி தொடங்கினால் அதிகமல மூன்று மணிக்கே மருத்துவமனைக்கு வந்து விடுவாள். அந்தக் கர்ப்பிணி பெண்களைத் தெய்வத்தின் சாயலாக பாவித்து வணங்குவாள். உப்பி நிற்கும் பிரசவித்த வயிற்றை கை கூப்பித் தொழுவாள்

"நீங்கள் எல்லாம் கடவுளின் பிரதிநிதிகள். கடவுள் ஒரு மனிதனை உருவாக்குகிறானோ இல்லையோ? உங்கள் வயிற்றில் இறைவன் உருவாகிறான் மகதர்கள் தான் இறைவனின் தாய் " என்று கர்ப்பினிப் பெண்களை தொட்டு வணங்குவதில் அவளுக்கு அனாதிப் பிரியம். அதனால் ஜோதிக்கு செவிலித்தாய் என்பதை விட சேவைத்தாய் என்று அந்த மருத்துவமனையில் இன்னொரு பெயர் வைத்திருந்தார்கள். அவள் ஒடி ஆடி அங்கும் இங்கும் அலைந்து திரியும் அழகைப் பார்த்து பிரசவத்திற்கு வந்த குடும்பத்தார்கள் ஜோதியை பிரியமாக தங்கள் வீட்டு பிள்ளையாக நினைத்துக் கொள்வார்கள்.

இப்படி ஒரு பெண்ணா? கொஞ்சம் கூட முகத்துல கவலை இல்லை. வெறுப்பு இல்ல. இவங்கெல்லாம் யாரோ அப்படிங்கற நினைப்பு இல்ல. எல்லாத்தையும் தன்னோட குடும்பமா நினைக்கிற இந்தப் பொண்ணோட மனசு எவ்வளவு பெரியது? என்று அந்த மரு